(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** 22 UTM 613

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 50

ஆறாவது பருவம் நேரம் : 3 மணி நேரம்

பகுதி – 3

## சங்க இலக்கியம் – எட்டுத்தொகை

பகுதி – அ **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. பெயல் - பொருள் தருக?
   அ)கடல் ஆ) மேகம் இ)காற்று ஈ) மழை
2. எருமைப்பத்து இடம்பெறும் திணையைச் சுட்டுக?
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) பாலை
3. நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல் எது?
   அ) குறுந்தொகை ஆ ) கலித்தொகை இ)அகநானூறு ஈ) நற்றிணை
4. நான்காம் பத்துப் பாடியப் புலவர் யார்?
   அ)காப்பியாற்றுக் காப்பியனார் ஆ)கபிலர்
   இ)பாலைக் கௌதமனார் ஈ)பரணர்
5. இசைப்பாக்களால் தொகுக்கப்பட்ட நூல் ............
   அ) கலித்தொகை ஆ) பரிபாடல் இ)குறுந்தொகை ஈ)நற்றிணை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. யாரும் இல்லை தானே கள்வன்? என்பது தலைவி வருந்தி தோழிக்குக் கூறியதாகும். சரியா? தவறா?
7. கலித்தொகையில் நல்லந்துவனார் அருளியப் பாடல் எண் (அல்லது) தலைப்பைச் சுட்டுக.
8. புறநானூற்றுப் பாடல்கள் கூறுவன அகச் செய்திகளா? புறச்செய்திகளா?
9. பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தில் பாடப்பட்டோர் யார்?
10. சூரபத்மனை அழிக்க முருகன் எதன் மீதேறி போருக்குச் சென்றார்?

**பகுதி – ஆ** (5 x 3 = 15)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** **(K3)**

11. அ) பொய்கையார் பாடலில் காணலாகும் தலைவியின் உளப்பாங்கினை விவரி.

( *அல்லது* )

ஆ) குறுந்தொகைக் காட்டும் கார்ப்பருவத்தின் தன்மையினை எழுதுக.

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

12. அ ) கள்வன் பத்தில் நண்டின் செயல்பாட்டை விளக்குக.

( அல்லது )

ஆ) கலித்தொகைப் பாடல் சுட்டும் மருதக் கலியில் காணலாகும் தலைவியின் கூற்றினை எழுதுக.

13. அ) தலைவியின் உளப்பாட்டை நித்திலக்கோவை வழி நிறுவுக.

( அல்லது )

ஆ) வேள்ப்பாரியைக் கபிலர் பாடிய முறையை விவரி.

14. அ) நான்காம் பத்தில் காணப்படும் சேர மன்னனின் மாண்பினை புலவர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

( அல்லது )

ஆ ) சேரன் செங்குட்டுவனின் ஆட்சிச்சிறப்பை பரணர் பாடல் வழி விவரி.

15. அ) திருமாலின் பெருமையினைப் பரிபாடல் வழி விளக்குக.

( அல்லது )

ஆ) பரிபாடலில் காணப்படும் வையை ஆற்றின் தன்மையினை எழுதுக.

## பகுதி – இ (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4 & K5)

16. அ) குறிஞ்சி, முல்லைத்திணைகளில் காணப்படும் பாடல் கருததினை விளக்கியுரைக்க.

( அல்லது )

ஆ) குறிஞ்சித் திணைகளில் வெளிப்படும் தோழி தலைவியின் உரையாடலை எடுத்துரைக்க.

17. அ ) நெய்தல் திணை சுட்டும் தோண்டிப்பத்து, வளைப்பத்துச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

( அல்லது )

ஆ) மருதன் இளநாகனார் குறிப்பிடும் தலைவியின் மனப்பாங்கினை விவரிக்க.

18. அ) நித்திலக்கோவையில் காணப்படும் தோழியின் கருத்தினை எடுத்துரைக்க.

( அல்லது )

ஆ) மூவேந்தர்களைப் பற்றி கபிலர் பாடிய விதத்தினை ஆராய்க.

19. அ) நான்காம் பத்துக் கூறும் மன்னனின் சிறப்பியல்புகளைத் தொகுத்தெழுதுக.

( அல்லது )

ஆ) ஐந்தாம் பத்தில் காணலாகும் பரணர் பாடலின் கருத்தினை விளக்கியுரைக்க.

20. அ) மதுரையின் சிறப்பினைத் தொகுத்துரைக்க.

( அல்லது )

ஆ) முருகப்பெருமானின் அருட் சிறப்பை செவ்வேள் பாடல் வழி நிறுவுக.



************